## Editor's Note

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 1ST AUGUST, 1980 No. 31

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

## Subscription

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.
*Apply to:*
The Manager,
'Morning Star',
Vaddukoddai.


## Estate Schools in Sri Lanka

Several Trade Unions as well as individuals have, we learn, met the President and pointed out him the present plight of Estate Schools which have been taken over by the State.

Some 390 Estate Schools have been, according to news reports, already taken over by the government. The balance of 300 are due to be taken over in the next few months.

But several of these have been closed down or have automatically ceased to function owing to the lack of basic amenities—buildings, staff, scheme of studies etc. etc.

'Volunteer teachers' who are being given allowances by voluntary organisations are the only bright spots in an otherwise dismal picture.

There is, however, a new awareness among the Estate population in respect of the education of their children as is reflected in the number of School Development Societies.

Estate schools should be brought into the main stream of educational development in this country.

Mr. George A. Gnanamuttu, the Author of two books on the Plantation Worker in Sri Lanka draws the attention of the Christian Church to this indigenous 'mission field' which still remains unexplored.

*Appreciation*

## A Reputed Trade Unionist Passes away

The death of Mr. K. C. Nythiananda at the General Hospital, Jaffna on 12-7-80, removes from the Scene one of Sri Lanka's reputed Trade Union Pioneer.

Mr. Nythiananda had his early education at Kuala Lumpur where he came under the influence of American Missionaries who taught him among other values, self-reliance and a sense of purpose.

He returned to Ceylon in the mid-thirties and joined the Public Service of the country which he adorned for many years as a faithful 'servant' of the government of the day.

At the same time he played a decisive role in giving the Trade Union Movement a forward shove during the transitional period when Sri Lanka was moving from colonial rule to an Independent Status.

His outstanding contribution to public life in this country was his tranquil pursuit of his goals and his humanitarian approach to problems which confronted him.

On no occasion were these traits were marked than in the herculian task which he undertook of rehabilitating the Refugees on the wake of the August Racial Disturbances in 1977 which engulfed almost the whole island within a period of two weeks.

The presence of a large number of 'refugees' at his funeral in Jaffna was a mute testimony to the selfless services rendered by Mr. Nythiananda to the Tamil community during one of the darkest hours in its annals.

*Tenth Death Anniversary*

## SERVICE OF COMMEMORATION AT FORT CHURCH, JAFFNA

Rev. (Dr.) D. T. Niles who died on 17-7-80 was remembered at a Special Service of Commemoration organised by the Jaffna Christian Union at the Fort Church, Jaffna on Wednesday, 30-7-80 at 5-15 p.m.

Rev. S. Wesley Ariarajah led the Invocation (கூட்டுப்பிரார்த்தனை). The choir rendered two lyrics one of which was *The Magnificat*, the words of which were composed by Dr. D. T. Niies to an Indonesian Tune and which is found in the EACC Hymnal.

Mr. Suri Williams and Sevak Rev. Sam Alfred read the Bible Lessons.

Canon Sam D. Horshington led the Litany of Thanksgiving.

### "A great Gift of God to the Country"

Rev. Soma K. Perera, President-Elect of the Methodist Conference, in his address said that Dr. D. T. Niles lived at a creative and most momentous period in the history of the Christian Church. It was a period which saw the birth of the Ecumenical Movement which made a profound impact on the life of the Church. It was also a period which marked the establishment of autonomous churches in the mission field. The missionary era was tapering to a close.

*A MAN OF HIS TIME*

Young dynamic leadership was a need of the hour and D. T. supplied this need in abundant measure. Amidst the changes and challenges in the Asian scene — the resurgence of ancient religions, the rise of younger churches and the first stirrings of the incipient movement for Organic Church Union — D. T. remained an articulate spokesman of the Asian Church in International Forums where these topics were brought to a burning focus.

*DYNAMIC LEADERSHIP*

His own mind was fertilised by these new developments. "I am not a Theologian" he once said, "I am only a thinker". At the time of his death, his leadership had received such recognition that he was at the same time President of the Methodist Conference, President of the CCA and one of the Presidents of the World Council of Churches.

*D. T. — THE MAN*

A Theologian of international repute, and a world Christian leader yet he preferred to have his roots in his own country Jaffna, in the northern part of Sri Lanka. He refers to his motherland in sentimental tones as "the rock from which he was hewn". His care for people was one of his outstanding human qualities, a care which brought him many enemies too. But he suffered silently for them. 'Heaven and Hell are other people' was one of his oft quoted maxims.

His life and work remain as an inspiration to all those grappling today with the tumultous problems of the Church in a rapidly changing and complex world.

### To one hope he pressed, "with every grace endued"

The Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the J. D. C. S. I. in his address referred to the "many parts". Dr. Niles had "played" in his Ministry. He was Pastor, Author, Educationist, Theologian, Poet, and Christian leader of world stature. He also held some of the most important offices in the Church. He was one of the Presidents of the WCC, a President of the CCA and President of the Methodist Conference.

*AN OVERWHELMING PASSION*

But the distinctive trait of his multi-pronged ministry was his overwhelming passion to communicate God's word in a language which all can understand and in the context of living human situations.

To fulfil this mission in his life, God had "endued him with every grace".

Dr. Niles entered with passionate zeal into the strange world of the Bible and came "back again", fired with an equal zeal to communicate this 'world' and make it relevant to contemporary situations. Like the "householder" in the parable mentioned in St. Mathew's Gospel (13 : 52) he "brought out of his treasure,

*(Continued on last page)*

*IN BRIEF*

○ *The Fellowship of the Least Coin* will observe the twentyfifth Anniversary in November this year.

○ *The Circuit Labour Tribunal* sittings in Jaffna is being held at Chavakachcheri, Mr. V. Vimalarajah, the President of the Tribunal, presiding.

○ *375 Science Graduates* are to be recruited shortly, according to the Minister of Regional Development, Mr. Chelliah Rajadurai, to ease the prevailing shortages in government schools.

## Bible Knowledge Quiz

Postponed to September 7th. Applications closing date extended to August 30th.

S. N. Sugunananthan,
R. E. B.
Vaddukoddai.

## IN MEMORIAM

In Treasured Memory
of

### THOMAS RAJADURAI

Called to Rest: August 8, 1975

"*Peace perfect peace with loved ones far away*
*In Jesus' keeping we are safe and they.*"

Remembered by his loved ones.

Atchuvely.

## IN MEMORIAM

In Everloving Memory
of

### Irene Devendre (Nee Arnold)

Called Home — 22nd August, 1978

"*Deep in our hearts you will always stay*
*Loved and remembered every day.*"

Remembered by her father, sisters, brothers and in laws.

33, Ratnakara Place,
Dehiwela.

## Ecumenical Gathering at Enthronement

The gathering at the enthronement ceremony on 25-3-80 of Robert Runcie as the 102nd Archbishop of Canterbury has been described as a distinctly ecumenical gathering

The three thousand people gathered in England's Canterbury Cathedral included 158 guests from outside the Anglican communion

Archbishop Runcie believes that the world-wide Christian Church would not be able to speak with the authority of Christ until it spoke with one voice.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

உலகத்தில் குழந்தைகள்தான் சற்று யோக்கியமானவர்கள்.
— பி. ஆர். இராஜமையர்.


மலர் 140 ] 1 — 8 — 1980 [ இதழ் 31


## அத்தியட்சாதீன ஸ்தோத்திர பலி ஞாயிறு

ஆகஸ்ட் மாதம் மூன்றந் திகதி அத்தியட்சாதீன ஸ்தோத்திர பலி ஞாயிறாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அத்தியட்சாதீனத்திற்காக இறைவனை ஸ்தோத்திரிக்கவும் எமது நன்றிப் படையல்களைச் சமர்ப்பிக்கவும் இந்த ஞாயிறு ஏற்பட்டுள்ளது.

நமது ஆண்டவர் துதிகளின் மத்தியில் வாசம் செய்கின்றவர் என்று திருமறை கூறுகின்றது. முறுமுறுப்பவர்கள் மத்தியிலே முறுமுறுப்பதற்கு எப்பொழுதும் காரணங்கள் இருந்து கொண்டேயிருக்கும். அமெரிக்கன் மிஷனினாலும், தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தினாலும் நாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் கணக்கிலடங்கா கல்வியில், சுகாதாரத்தில், ஆன்மீகத்தில் நமக்கு வழிகாட்டிகளாய் அமைந்து நம்மை உயர்த்தி வைத்தவர்கள் அமெரிக்கன் மிஷனரிமார். யாழ்ப்பாணத்து மக்களின் எழுச்சிக்கும், உயர்வுக்கும் அமெரிக்கன் மிஷனரிமாரின் கல்விப் பணியே முக்கிய காரணம் என்பது இலங்கை வரலாற்று அறிஞர்கள் பலரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.

அமெரிக்கன் மிஷன் ஏற்றி வைத்த தீபத்தை அணைந்து போகாமல் காப்பாற்றி வருகின்றது தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனம். பிரச்சினைகள், சோதனைகள் பலவற்றை எதிர்நோக்க வேண்டிய காலமாக இருந்தபொழுதும், யாழ்ப்பாண அத்தியட்சாதீனம் தனது சேவையைத் தொடருகின்றது. புதிய புதிய இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. வரணி மிஷன் பண்ணை, அருள்மனை, பரந்தன் விரிவாக்கத் திட்டம் என்பன சமீப காலத்தில் அத்தியட்சாதீனம் மேற்கொண்ட நடவடிக்கைகள். கடுகு விதையைப் போல இந்நிறுவனங்கள் சிறிய நிலையில் தொடங்கி இன்று ஆல்போற் பருத்து அறுகுபோற் படர்ந்துவிட்டன. அத்தியட்சாதீனம நமது சபைகளை நிர்வகித்து வருகினறது ஊழியர்களைப் பயிற்றுவித்து நமக்கு நற்செய்தி அறிவிக்க அனுபபுகின்றது அதன் பணி தொடர சபையார் பார்வையாளராக இருந்தாற் போதாது, எல்லாரும் அதன் வேலைகளில் பங்கு கொணடு உழைக்க வேண்டும். ஸ்தோத்திரப் பலியைத் தாராளமாக வழங்கும்பொழுது அதன் பணியில் நாம் அதிகமாக ஈடுபடுகின்றோம். அதன் வேலையில நமது கரிசனை வளருகின்றது. திருச்சபையாரின் கொடையிலேயே சபை வளர வேண்டும் பிறநாட்டுப் பணத்தில் வளருகின்ற சபை நாட்டிலே வேர்விட மாட்டாது. யாழ்ப்பாணத்தில் இருந்த ஒல்லாந்து சீர்திருந்திய திருச்சபையைப் போல அது மறைந்துபோய்விடும்.

"அருமை இச்சபையின் ஆதி மிஷனரி
குருமார் ஆவிகள் கூடி இன்று
வானமண் டலத்தில் வாழ்த்தொலி எடுப்பதை
ஞானக் கண்களால் நயந்து நோக்கி
ஆரு யிரம்மைல் அப்பா லிருந்து
ஆருய்ப் பெருகிய அன்பு வெள்ளம்
வாழ்க என்றே வாழ்த்துவோம் நம்சபை
வாழிய! வாழிய வழிவழிச் சிறந்தே."

## செய்திச் சிதறல்

### ஈரான் ஷா காலமானார்

ஈரான் முன்னாள் மன்னர் ஷா கடந்த 27-ம் திகதி ஞாயிறன்று கெய்ரோ மருத்துவ மனையில் காலமானார். கடந்த ஒன்றரை வருடங்களின் முன்னர் ஈரானியப் புரட்சியின்போது முடியை இழந்து நாட்டைவிட்டு வெளியேறிய மன்னர் ஷா முதலில் எகிப்திலும் பின் அமெரிக்கா உட்படப் பல நாடுகளிலும் தங்கியபின் கடந்த மார்ச் மாதம் முதல் எகிப்தில் தங்கியிருந்து புற்று நோய் சிகிச்சை பெற்று வந்தார். இடையிடையே அவர் உடல் நிலை தேறியபோதும் இறுதியில் புற்றுநோயே அவரது உயிரைக் குடிக்கும் போட்டியில் ஈரானியப் புரட்சியாளர்களை முந்திக்கொண்டது. பூதவுடல் இராஜாங்க மரியாதைகளுடன் எகிப்திய அரச குடும்பத்தினரின் கல்லறைக்கருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதையொட்டி எகிப்து ஏழுநாள் துக்கதினம் அனுஷ்டித்தமை குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் மன்னாரில் எண்ணெய் வேட்டை

அமெரிக்க கம்பெனி முழுச் செலவையும் தாமே பொறுப்பேற்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் மன்னாரில் எண்ணெய் வள ஆய்வு மேற்கொள்ளவுள்ளது. மேற்படி ஆய்வின் வருமானம் பெறப்படும் பட்சத்தில் அதில் நாற்பது வீதம் அமெரிக்க சிற்றி சேர்விஸ் ஸ்தாபனத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்பது ஒப்பந்தத்தில் ஓர் அம்சமாகும்

## செமினறி காலம்

யாழ். கல்லூரி பரிசளிப்பு விழாவில் செல்வி மேனகா நடராஜா பேசியது

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் 19-ம் நூற்றாண்டின் முதற் பகுதி ஓர் உன்னதமான காலகட்டமாகும். கல்வியும், கலைகளும், இலக்கியமும், வைத்தியமும் ஓங்கிய இந்தக் காலகட்டத்தில் முதன்மை பெற்று விளங்கிய ஸ்தாபனமே வட்டுக்கோட்டை செமினறி ஆகும் நமது கல்லூரியின் வரலாற்றிலே பொற்காலமாக அமைந்தது செமினறி காலமாகும். 1816 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க மிஷனறித் தொண்டர்களாகிய B. C. மைக்ஸ், D. Daniel Poor, மைரன் Winslow, வீவை ஸ்போல்டிங், H. Woodward, J. Scudder ஆகியோரின் உழைப்பாலேயே 1823-ம் ஆண்டு இந்தக் கலாபீடம் வட்டுக்கோட்டையில் மலர்ந்தது. "இலங்கைத் தீவின் வடகோடியில் அமைந்திருந்த சின்னஞ்சிறு குடாநாடாகிய யாழ்ப்பாணம், கீழைத்தேசங்களிலேயே முதன் முதலாக ஐரோப்பியர் பாணியில் அமைந்த உயர் கலாபீடம் ஒன்றைப் பெற்றுக்கொண்டமைக்கு இறைவனின் விளக்க முடியா வழிகளையே காரணமாகக் கூறலாம் என J. V. செல்லையா அவர்கள் தாம் எழுதிய "ஒரு நூற்றாண்டு கால ஆங்கிலக் கல்வி" என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கின்றவர்கள் வடமாகாணத்தின் எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும் இந்த மகோன்னத ஸ்தாபனத்தையே முக்கிய காரணமாகக் கொள்வார்கள். இந்த செமினறியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நோக்கும்போது இதனை ஆரம்பித்த மகா வீர தியாகிகளுடைய திட சங்கற்பத்தையும், மன உறுதியையும், கடின உழைப்பையுங் கண்டு கொள்ளலாம். அக்காலத்திலே இலங்கையைப் பரிபாலனம் செய்து வந்த பிரிட்டிஷ் தேசாதிபதிகள் அமெரிக்க மிஷனறிமாரின் கல்விப் பணிக்கு முட்டுக்கட்டை இட்டவண்ணமே இருந்தார்கள். அமெரிக்காவிலிருந்து மிஷனெறிமார் இங்கு வருவதற்கு தடை விதித்ததோடு அமையாது வட்டுக்கோட்டையிலே கலாசாலை அமைக்கப்பட வேண்டுமானால் பிரிட்டிஷ் ஆசிரியர்களே அங்கு போதிக்க வேண்டும் என்றும் அறிவித்தனர்.

பிரிட்டிஷ் உயர் உத்தியோகத்தர்கள் இதன் வளர்ச்சிக்குப் பணம் கொடுக்க விரும்பவில்லை. யாழ்ப்பாணத்து மக்கள் இக்கலாசாலைக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பத் தயங்கினர்.

இதனால் இறையன்பும் நெஞ்சுறுதியும் படைத்த மிஷனறித் தொண்டர்கள் கலாசாலை அமைப்பதை விடுத்து செமினறி ஒன்றை உருவாக்க முயற்சித்தனர். இந்த செமினறி உயர்ந்த இலட்சியமும், ஆழ்ந்த அறிவும், இறைபக்தியுமுடைய மாணவர்களை உருவாக்குவதனையே தனது இலட்சியமாகக் கொண்டிருந்தது. வானசாஸ்திரம், விஞ்ஞானம், இலக்கணம், தத்துவம், சரித்திரம், இறையியல் போன்ற பாடங்கள் தக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்பட்டன Dr. Daniel Poor இதன் முதல் அதிபராகப் பதவி ஏற்றார். காபிரியேல் Tissera என்னும் பண்டிதர் சிரேஷ்ட தமிழ் ஆசிரியராகவும் ஆங்கில ஆசிரியராகவும் பணி புரிந்தார். நாளடைவில் இதன் புகழும் பெருமையும் நாடெங்கும் பரவலாயிற்று. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்க ஆசைப்பட்டனர். வருடந்தோறும் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. பிரிட்டிஷ் அதிகாரிகள் இதன் பெருமையை உணர்ந்து இப்பரீட்சைகளில் கலந்து கொண்டனர். இவ்வாறு பரீட்சையில் கலந்து கொண்டவர்களில் நீதியரசர் Sir றிச்சேட் Ottley, இலங்கையின் தேசாதிபதி றைட் கொன்றபின், Sir Wilmat Horton முதலியோர் குறிப்பிடத்தக்கவர். இவர்களைத் தவிர வேறு நீதிபதிகளும் ராணுவத்தர்களும் இப்பரீட்சையில் சமூகமாக இருந்தனர். விரிந்த மனப்பான்மையும் உண்மையான கல்வி ஆர்வமும் படைத்த அமெரிக்க மிஷனறிமார் தமிழ் கல்விக்கும் இலக்கியத்துக்கும் கூட வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள். இதுவரை காலமும் தமிழ்ப் புலவர்களினாலும் வித்துவான்களினாலும் வளர்க்கப்பட்டு வந்த தமிழ்மொழி மேலைத் தேசத்தின் ஆராய்ச்சி முறைகளையும் எழுத்து முறைகளையும் பெற்று வீறு நடை போடத் தொடங்கியது. சமஸ்கிருதம், வேதாந்தம் முதலியவற்றுடன் மனுதர்ம சாஸ்திரம், இந்து வான சாஸ்திரம், ராமாயணம், கந்தபுராணம் முதலியனவும் போதிக்கப்பட்டன. 1830இல் ஈழம் வந்த கோல்புறூக் கமரன் என்ற சாரணக் குழுவினர் செமினறியின் பணியை வாயார வாழ்த்திச் சென்றனர். அதேவருடம் இந்தியாவில் இருந்து வந்த பேராயர் மகாகனம் றெஜினல்ட் Hebar இந்த செமினறியின் நிர்வாகத்தைப் பாராட்டியதோடு அமையாது அதன் வளர்ச்சிக்குத் தம்மால் ஆன சகல உதவிகளையும் செய்வதாக வாக்களித்துச் சென்றனர்,

1835-ம் ஆண்டிலே இந்த செமினறியில் ஒரு முக்கியமான மாற்றம் நிகழ்ந்தது. அந்த வருடம் வரை செமினறியின் அதிபராக இருந்து அதனை வளர்த்து வந்த Dr. Daniel Poor என்னும் மாமேதை அப்பதவியிலிருந்து விலகி, இந்தியாவிற்குச் சென்று சுவிசேடப் பணி செய்ய விரும்பினார். அவருடைய விருப்பத்திற்கு செமினறியின் தர்மகர்த்தர் சபை இசைந்தது. அவர்கள் Dr. Daniel Poor அவர்களின் ராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டு அவருக்குப் பின்வருமாறு எழுதினார்கள். 1823-ம் ஆண்டிலே செமினறி தோன்றிய சமயத்திலிருந்து இன்றுவரை Daniel Poor இச் செமினரிக்கு ஆற்றிய அரும் பெரும் சேவைகளை மனதார உணர்ந்து, இறைவன் அவரை இன்னும் மேலான பணிக்கு அழைத்திருக்கின்றார் என்ற நம்பிக்கையுடன் அவருடைய ராஜினாமாவை ஏற்றுக் கொண்டனர்.

Dr. Daniel Poor சென்ற நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவர் என்பதில் ஐய


(தொடர்ச்சி 3-ம் பக்கம்)


## ஆகஸ்ட் 4இல் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநாடு

மொரீசியஸ் தீவின் போட் லூயிசிலுள்ள காந்தி நினைவு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டில் இலங்கையின் சார்பில் மேற்படி இயக்கத்தின் நிறுவனரும் பொதுச் செயலாளருமான குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார்.

## பொன் விழா

கடந்த ஐம்பது வருடங்களாக இறை பணியை இனிதே ஆற்றிய கம்பளை மெதடிஸ்த ஆலயம் தனது பொன் விழாவினை ஆடி 25, 26 27-ம் திகதிகளில் வெற்றிகரமான முறையில் கொண்டாடியது சிறப்புக்குரியதே! இவ் விழாவில் திரு. S. பொன்னுத்துரை அவர்களின் கரங்களினால் உருவாக்கப்பட்ட சிலுவை பொன் விழா நினைவுச் சின்னமாக ஆலய பீடத்தில் பதிக்கப்பட்டது. திரு. வசீகரன், செல்வி செல்வநிதி கோயில் பிள்ளை, செல்வி நேசம் சொலமன் ஆகியோர்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட குத்து விளக்கு, விளம்பரப் பலகை, மேசை விரிப்புக்கள் என்பனவும் முதன்முதலாக பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டன.

25-07-80 அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு விழாவானது கண்டி சேகர முகாமைக்குரு அருட்திரு. ஹரோல்ட் பர்ஞுந்து அவர்களினால் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விழா மலர் வெளியீட்டு நிகழ்ச்சியில் முதற் பிரதியினை தலவாக்கலை மெதடிஸ்த சபை ஊழியர் திரு. J. W. சவரிமுத்து அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து "நாம் நடந்து வந்த பாதையிலே......" என்ற தலைப்பில் ஆலய வரலாறு, சுதாப்பிரசங்கமாக திரு. D. ஜெயசிங் அவர்களினால் அழகான முறையில் எடுத்துரைக்கப்பட்டது.

இரண்டாம் நாள் 26-07-80 சனிக்கிழமை நிகழ்ச்சியானது இறையியல் கழக அன்பர்களின் இன்னிசையுடன் ஆரம்பமாகியது. "சிறுவர் பூங்கா" நிகழ்ச்சியை திரு. D. கனகசபை நடாத்திய அதேவேளை, அருட்திரு. P. பென்ஜமின் அவர்கள் "வாலிபர் வட்டம்" நிகழ்ச்சியை நடாத்தினர். அவரது முயற்சியால் குறுகிய சில நிமிடங்களில் திடீர் நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டன. கலை நிகழ்ச்சியில் சபை சிறுமியரின் தீப நடனம், கம்பளை சாந்த ஜோசப் கன்னியர் மட மாணவிகளின் பரத நாட்டியம், நாட்டிய நாடகம் என்பன இடம் பெற்றன. அடுத்து "சிந்தித்துப் பார்" என்ற தலைப்பிலான உரையாடலை கம்பளை மெதடிஸ்த இளைஞர் இயக்கத்தினர் நடாத்தி முடித்தனர். இறுதியாக இறையியல் கழக தமிழ் - சிங்கள கலா மன்றத்தினர் இணைந்து அளித்த "உண்மை வழி எது?" என்ற வில்லிசை அனைவரது உள்ளத்திலும் ஆழப் பதிந்ததோடு அவையினரின் ஏகோபித்த பாராட்டையும் பெற்றது.

இறுதித் தினமான 27-07-80 அன்று நிகழ்ச்சியானது "ஸ்தோத்திர வழிபாடு உடன் ஆரம்பமாகியது. அடுத்து திரு. ஜெயநேசன் அவர்களினால் புதிய பாடல்கள் பல பயிற்றுவிக்கப்பட்டன. அதன்பின்னர் "திருமறை ஆய்வு" இடம்பெற்றது, அன்று மதிய போசனத்தை இன - மத - மொழி வேறுபாடு இன்றி அனைவரும் பந்தியமர்ந்து உணவருந்தியது வரவேற்கத்தக்கது, மாலை நிகழ்ச்சியானது ஐக்கிய தேநீர் விருந்துடன் (Golden Party) ஆரம்பமாகியது. பி. ப. 4-00 மணிக்கு விழாவின் சிறப்பு அம்சமான "பொதுக் கூட்டம்" மெதடிஸ்த சபா சங்கத் தலைவர் அருட்திரு P. B. இராஜசிங்கம் B. D. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஐந்து விரல்களும் ஒன்றிணைந்து பணி புரிவது போல், இறை பணியில் திருச்சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பணி புரிய வேண்டும் என்ற உயர்வான கருத்தினை அவர்கள் அழகாகக் கூறினார். இதனைத் தொடர்ந்து திரு. S. திருச்செல்வத்தின் வரவேற்புரையும் அருட்திரு. P. பெஞ்சமின், அருட்திரு. V. விவேகநாதன் ஆகியோரது வாழ்த்துரைகளும் இடம் பெற்றன.

கட்டுரை - பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளை திருமதி இராஜசிங்கம் அவர்கள் வழங்கினார்கள். பின் திரு. J. பாக்கியநாதன் அவர்களின் நன்றி நவிலலைத் தொடர்ந்து சபை ஊழியர் திரு. D. J. S. கோயில்பிள்ளை அவர்களின் இறை வேண்டுதலோடு நிகழ்ச்சிகள் யாவும் இனிதே முடிவுற்றன.

தொகுப்பு: "நிதி"

## கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலகத்தின் ஜாதிகளுக்கிடையில் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஸ்தாபிக்கும் கர்த்தர்

(முற்றொடர்)

உங்கள் மணிக்கட்டுகளில் நீங்கள் கட்டியிருக்கிற கடிகாரங்கள் மணிக் கம்பி, நிமிடக் கம்பி இன்றி நேரத்தைக் காட்டாமல் ரிக், ரிக் என்ற ஓசையை மாத்திரம் செய்வதாயிருந்தால் இக்கைக்கடிகாரங்களினால் யாது பயன்? அவ்வண்ணமே நம்மவரில் பலர், சமாதானம், ஒற்றுமை, ஐக்கியம் முதலியவைவைப் பற்றிக் கதைக்கிறார்கள். இந்த நமது இலங்கையிலே பல காரியங்களிலும் மனிதனை மனிதன் பிடித்து விழுங்கப் பார்க்கிறானேயல்லாமல் சமாதானம் பண்ணுகிறவனாய்க் காணப்படாததால் தேவனின் சித்தம் நிறைவேறுகிறதில்லை.

பரி. பவுல் ரோமருக்கெழுதின நிருபம் 1:14-ல் 'கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்,' என்று எழுதியிருக்கிறார். கிரேக்கர் அதிகம் கற்றுத் தேறின மக்கள். மூடர் என்று அவர் குறிப்பிட்டது இவ்வுலக சனத்தொகையில் அரைப் பங்கு கூடிய பாமர மக்களையே. சிறீ லங்காவில் நாங்கள் சகலருக்கும், உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், பாமரர் என்ற வித்தியாசமில்லாது எல்லோருக்கும் கடனாளிகளாயிருக்கிறோம். ஏனெனில் நாங்கள் தேவனின் பார்வையில் ஒரே மக்கள், ஒரே குலம். எங்களுக்குள் யாதும் வித்தியாசங்கள் காணப்படின் அவை யாவும் நம்மால் உண்டாக்கப்பட்ட தற்காலிகமான வித்தியாசங்களேயாகும். நாம் சமாதானத்தை வெறுப்பவர்களாயோ, அழிப்பவர்களாயோ இருக்காமல், சகல ஜாதி மக்களிடையேயும் ஒற்றுமை, ஒன்றியம், ஒருங்கிணைவு, மனப்பூர்வமான ஒத்துழைப்பு, நற்கிரியைகள் முதலியவற்றைத் தூண்டுகிறவர்களாய் இருந்தால் தான் தேவன் நம்மைப் படைத்த சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயும் பூமியின் மேல் சமாதானம் உண்டுபண்ணுகிறவர்களாயுமிருப்போம்.

எங்கள் ஆண்டவர் 'என்னைப் பின்பற்றுங்கள்' என்று சொன்னபோது நாங்கள் தம்மைப் போலாக வேண்டுமென்றே விரும்புகிறார். நாங்கள் அவரைப் போலாவதென்றால், அவரைப் போல உலக சமாதான காரணகர்த்தாவாக நாங்கள் வசிக்கும் இடங்களில் சமாதானத்தின் புத்திரராக விளங்க வேண்டும்.

(6) சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கட்டிடத்திற்கு அவரின் திட்டங்களும் கட்டிட நிபுணத்துவமும் பின்வருமாறு :— நமதாண்டவர் இவ்வுலக சமாதானத்தை மனிதன் மனிதன் மேல் வைக்கும் அன்பின் மூலமாகவும், கடவுளில் நாம் வைக்கும் அன்பு, பக்தி, ஆத்மார்ப்பணம் முதலியவை மூலமுமாகவே கட்டி எழுப்புகிறார். 'தேவனை முதலாவதாகத் தேடுங்கள்,' என்று அவர் கூறியதன் அர்த்தம், எல்லாவற்றிலும் மேலாகத் தேவனே நமது முக்கிய மூல ஆதிக்கக் கருத்தாயமைய வேண்டும், இரண்டாவதாக 'நான்' என்பதற்கு முதல் 'மற்றவரின் தேவை' என்ற கருத்து அமைய வேண்டும். நாம் மற்றவர்களுக்குச் சுயநலமற்ற தியாக சிந்தையோடு கூடிய சேவை ஆற்றும்போது அது எல்லோரையும் ஒருங்கிணைக்கும் ஐக்கியக்கட்டாக அல்லது ஐக்கிய பாலமாக அமையும்.

எங்கள் தேவன் எங்கள் எல்லோரையும் கடவுள் ஒருவரையே தலைவராகக் கொண்டு ஒரே ஐக்கியமான மனுசிகக் குடும்பமாக வாழவேண்டுமென்று விரும்புகிறார். இக்கொள்கையை நாம் உண்மையாக ஆதரித்து வாழ்வோமானால் யுத்தங்கள், பகைமைகள், வறுமை, கொலை, களவு, பிறர் பொருளைச் சூறையாடல் இப்படியான மற்ற மனிதருக்கு மனிதர் இழைக்கும் தீங்குகள் நீங்கும். ஆனால் நாங்கள் ஆண்டவரின் உதவி ஒத்தாசையின்றி எதையும் சாதிக்கத் திராணியற்றவர்களாயிருக்கிறோம். 'நம்மால் முடியாதவைகள்' எனப்படுவன தேவனின் பலத்திற்கு மிஞ்சியவையல்ல. அவருடைய பலத்தையும் ஞானத்தையும் கொண்டு நாம் எதையுஞ் செய்து முடிக்கலாம். மத்தேயு 17:14—21-ல் கூறப்பட்டிருக்கும் சம்பவத்தைப் பற்றி நாம் சிந்திப்போமானால், சீடர்கள் இயேசுவைப் பார்த்து, 'எங்களால் அந்தக் காரியம் ஏன் கூடாமற்போனது', என்று கேட்டபோது, வசனம் 21-ல் 'இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது' என்றார்.

இன்று சிறீலங்காவில் ஒரு தேசிய ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் நிலைநாட்டுவது ஒரு பெரிய கஷ்டமான வேலையாயிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும் உண்மையாகவே உபவாசித்து, ஜெபம் பண்ணி தேவனின் ஒத்தாசையுடன் கூடிய தியாகங்கள் புரிந்தே இந்த சிறீலங்காவை ஒரு சமாதானமான ஒற்றுமையுள்ள வளமிக்க நாடாக்கலாம். இப்படி சிறீலங்கா ஆகும்பொழுது நாமும் சிறீலங்காவின் புத்திரர் என்று பெருமைப்படலாம்.

நான் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மெதடிஸ்த குருவாகச் சேவை புரிந்தவன். நான் சேவையாற்றிய இடங்களிலெல்லாம் எழுபது வீதத்திற்கு மேலானோர் தமிழ் சாகியத்திற்கு அப்பாற்பட்டவர்கள். அப்படி இருந்தும் எனது சேவைக் காலத்தில் எந்த இடத்திலாவது ஒரு சாதிக் கலவரமோ, முறைப்பாடோ ஏற்படவில்லை என்று யேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே தைரியமாய்ச் சாட்சி பகருகிறேன். நான் எனது வேலை விஷயமாக இலங்கையிலும் உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்றுள்ளேன். சிங்கள சகோதர சகோதரிகள் மத்தியில் அவர்கள் இல்லங்களில் அவர்களின் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய விருந்தாளியாகவும் இருந்துள்ளேன். அவர்கள் எனது சிறந்த நண்பர்களாக விளங்குகிறார்கள். எனது மனதில் நன்கு பதிந்துள்ள காரியமென்னவென்றால் உண்மையாகவே நமதாண்டவர் ஜாதிகளுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டி எழுப்பும் தேவனாயிருக்கிறார். மெதடிஸ்த சபா சங்கத் தலைவராகச் சட்ட திட்டங்களுக்கேற்ப 'அகில இலங்கை மெதடிஸ்த சினட்' இல் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு நடந்தபோது நான் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தெரியப்பட்டேன். இதிலிருந்து நான் கூற விரும்புவது யாதெனில் சிறீ லங்கா மெதடிஸ்த சபை, ஜாதிகளின் வித்தியாசங்களுக்கப்பாற்பட்டதென்றும் எங்கள் சிங்கள சிநேகிதர் நாம் நேசித்து ஆராதிக்கிற எல்லோருக்கும் பொதுவான ஒரே கடவுளை, நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டு தங்கள் வாக்குரிமையை எனக்குச் செலுத்தினார்கள் என்பதே உண்மை.

இயேசுக் கிறிஸ்துநாதர் தாமே எங்கள் சொந்த இரட்சகரும் எங்களுக்கும், எங்கள் நாட்டிற்கும் புது வாழ்வு அளிப்பவருமென்பது ஒரு பெரிய சத்தியம்.

## மரம் நாட்டு விழா

எதிர்வரும் மாரி காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய மரம் நாட்டுத் திட்டத்துக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. இதன்பொருட்டு பளை, கிளிநொச்சி போன்ற இடங்களில் பெருந்தொகையான நாற்று மேடைகள் போடப்பட்டுள்ளன.

## செமினறி காலம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லை ஆங்கிலத்திலும் தமிழிலும் விஞ்ஞானத்திலும் அவர் அதிக புலமை வாய்ந்தவர். சிவஞான போதத்தை துறைபோகக் கற்று அதனை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தவர். வட்டுக்கோட்டை செமினறி உறுதியான அத்திவாரத்தில் அமைந்து விட்டது என்பதை உணர்ந்த இம் மகா மேதை தனது அந்தராத்மாவின் வாஞ்சை ஆகிய கவி சேடம்பணியிலே ஈடுபட தென்னிந்தியா சென்றார். இவரைத் தொடர்ந்து Dr. ஹொஷிங்டன் செமினறியின் முதல்வரானார். இந்த வரிசையிலே பல தியாகிகள் அமெரிக்காவில் இருந்து வந்து வட்டுக்கோட்டை செமினறியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பணியாற்றி இந்த மண்ணோடு மண்ணாகி இருக்கின்றனர். அந்தத் தியாகச் செம்மல்களை நன்றி உணர்வுடன் இந்த நேரத்திலே நினைவு கூறுகிறோம். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் இலங்கையிலும் உயர் கலாபீடங்களிலும் இவர்களின் சேவையிலும் பணியிலும் ஒரு புத்தார்வமும் மறுமலர்ச்சியும் தோன்றியுள்ளது. அந்த நல்ல வளர்ச்சிக்கா இறைவனைத் துதிப்போமாக.

*EDITORIAL*

## Racism in World Focus

*Amsterdam*, a name rich in the annals of the Ecumenical Movement as the venue of the First Assembly of the World Council of Churches in 1948, has added to it another aura this year.

Onehundred Church participants met at Amsterdam from June 16 — 23 for a climactic World Consultation on the theme "*The Churches response to Racism in the 80s*".

Since the WCC set up its Programme to Combat Racism (PCR) ten years ago, the problem of Racism has, according to a Report, become "more sophisticated, more institutionalised and more pervasive".

The outcome of the June Consultation and the new insights and recommendations that have gone from there to the WCC Central Committee, scheduled to meet in the course of this month, are yet to be known.

One fact which the regional discussions, since January 1979, has highlighted is that throughout the world, *legislation* which directly or indirectly undermines minority communities, is on the increase.

A White Paper published recently in Britain is an instance in point. According to this *White Paper*, there will, in future, be three categories of British citizenship, in place of the present single citizenship of the United Kingdom and colonies.

The three categories are : — British citizenship, citizenship of the British dependent territories and British overseas citizenship.

Only those in the first category will have "unqualified right" to live in the United Kingdom. The new legislation replaces the British Nationality Act of 1948.

"The White Paper was creating a new race of boat people" was the candid comment of a Representative of the Joint Council for the Welfare of Immigrants in Great Britain.

Different minorities experience racism differently. In the Asian region, racism takes the form of the oppression of the indigenous minorities (scheduled castes in India, aborigines in Australia etc, etc) who suffer outright discrimination and a violation of civil liberties.

A working group in Asia felt that the deprivation from which minorities suffer in Asia, obtains within the context of "a pervasive and general deprivation".

Inflation, recession, unemployment with their resultant impact on living standards, mean that minorities are often at the receiving end of a policy of harassment and discrimination.

In Sri Lanka, the Sansoni Commission Report on the August holocaust of 1977 has already been submitted to the President. From the glimpses we have had of the Report, some of the very significant comments of the Commissioner, particularly regarding the guardians of our law who, "for some unknown reason," failed, to deal with unruly elements according to the law has not grabbed the headlines of our newspapers, as much as the Commissioners comments on *Eelam*.

The following extract from an Editorial comment in the *Madras Hindu* (30-7-80), on the Sansoni Commission Report, however, puts the dialogue (at the political level) on Race Relations in Sri Lanka on the correct wave - length : —

"The Sansoni Report found substance in the complaints made by Tamil Leaders that although they tried hard to get justice to their community they found that pacts were made only to be broken.

The Jeyawardene Government must heed these words and take prompt steps to ensure that the intentions of the government to redress the genuine grievances of the Tamils are adequataly fulfilled"

What has been the role of the Churches in their confrontation with racism ? For half a century racism has been high on the Churches' Agenda.

According to reports, in some Churches, many Church members have been active in putting their weight behind local campaigns in investigating instances of harassment or in monitoring police - community relations.

But to what lengths can and should the Churches go ? To what length can or should the Church in Sri Lanka go ?

*One World* (May 1980) sums up the position succinctly :-

"The Churches must decide to whom they will listen ......... To believe the oppressed means for many Churches a break with the position they occupy in their societies, while not doing so means that the real issues of domination are missed"

## Workshop on "Tomorrows Civil Engineer"

The Institute of Engineers, Sri Lanka which has on its roll over 750 Civil Engineers and a large number of 'non-corporate' members organised a workshop on 26-7-80 to discuss the subject of "The Civil Engineer of Tomorrow".

Among the matters that came up at the "Workshop" was the need for gearing the training of Civil Engineers in Sri Lanka to meet the needs of the country.

Sri Lanka needs both specially qualified academic staff as well as practising engineers in specialised fields. An increase in intake of civil Engineering undergraduates both in Moratuwa and Peradeniya was considered essential in the context of the Development targets of the Government.

Professors A. Thurairajah. Milton Amaratunga and V. Shanmuganayagam of the Peradeniya University and Professors Dayantha and Wijesekara of the Moratuwa University participated as lecturers at the Workshop.

## Service of Commemoration at Fort Church, Jaffna

*(Continued from first page)*

*things new and old*" But 'the old, old story' never lost its newness or its vitality.

*ACCENT ON MISSION*

In Dr. Niles' Books, the emphasis has always been on missionary theology. 'Mission' to him was the life of the Church. He proclaimed the gospel not merely "in season" and "out of season" but he even created his own "seasons" to tell his congregation that we belong not to a self preserving but a self-emptying church. Concern for the world was as much a passion with him as concern for the soul.

*AN UNCANNY SKILL*

An ecumenist and a pillar of the Church Union Movement he had an uncanny skill to see through the maze of differences, points of convergence which he exploited to the full in all deliberations pertaining to Church Union.

*SENSE OF CALLING*

As a spokesman of Third World countries in world forums, as an ecumenist who involved himself in the problems of other churches (as if Church Union had already materialised) and as a champion of the rights of smaller churches for self-hood, he always displayed a sense of Calling in his Ministry and also a sense of realism born out of the conviction that it was *faithfulness* (and not *success*) that was a Christian value and that faithfulness always calls for new ventures into uncharted regions. The Latin adage "*aut inveniam viam, aut faciam*". (I shall find a way or make one) summarised his working philosophy.

*MINISTRY OF THE CHURCH*

Dr. Niles' Life and work stands as a monument today before the Youth of our country and before those who guide their destinies in Sri Lanka — a monument constantly reminding us that outside the beaten track of Medicine, Engineering, Accountancy and other promising careers for our youth, *the Ministry of the Church* has still a potential which is yet to be explored by the Christian Church.

## World Church Leaders in Focus

O *John Bluck*, the 36 year old Anglican Priest and journalist from New Zealand who is also Editor of *One World* now heads the WCC Department of Communication.

O *Reverend Carlo Mastini* (52), a Bibilical Scholar, Rector of the Gregorian Institute in Rome has been consecrated Archbishop of Milan. For many years he was a member of the Pontifical Bibilical Commission.

O *Philip Morgan* (49), General Secretary of the Church of Christ in Great Britain and Ireland takes over from Rev. Henry Morton in September, 1980 the office of Chief Executive of the British Council of Churches.

O *Alice E. Ball* is the new General Secretary of the American Bible Society — the only woman to hold the post in its 163 - year history.

## Equal Rights for Women in Sri Lanka

Sri Lanka's first batch of *Women Soldiers* will participate in the Independence Parade on February 4, 1981. Sri Lanka's pioneer women soldiers will be trained by a team of three British women army officers who arrived here in June this year and are now at Diyatalawa.

The British team will be assisted by Sri Lanka's six women officer cadets who will be soon finishing their training at Camberley, the women's equivalent of Sandhurst.

Running one and a half miles everyday is reported to be among the routine exercises for women cadets at Camberley.

The Army has received 200 applicants for 12 non-commissioned women officers (Corporals) with salaries equivalent to that of a Physical Training Instructress.

## Fierce Competition among Airline Carriers

The 15 scheduled carriers operating out of Sri Lanka are caught in the vortex a fierce competition. Certain airlines are offering arranged cut - rate free paid tickets to travellers, outward bound from Sri Lanka.

The sale of such tickets paid in local currency is not recorded n the books of the airline operiators.

The Board of Airline Representatives (BAR) will soon appoint an investigating agency to probe into such malpractices which amount to local travel agents and scheduled carriers going out of business.

## Niles Memorial Scholarship Fund

The Jaffna Christian Union in collaboration with the Christian Institute for the Study of Religion and Society in Jaffna has established a Scholarship Fund for Post Graduate Research on "Religion and Society" which will be made available to any student on condition that the Research is pursued from Jaffna.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB / 8920 / 78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 1st August, 1980.